பாடம் 12

# நினைக்க வேண்டிய வார்த்தைகள்

**‘‘நான் உன்னிடம் சொன்னதை மறந்துவிடாதே; நாய்க்குச் சாப்பாடு கொடுக்க மறந்து விடாதே’’ என்று உன் பெற்றோர் உன்னிடத்தில் சொல்லியிருக்கிறார்களா? நீ கீழ்ப்படியும்படி அவர்கள் உன்னை நினைவுபடுத்துகிறார்கள். வாக்குறுதி பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் போக இருந்த இஸ்ரவேலருக்கு தேவன் எதை நினைப்பூட்டினார் என்று பார்ப்போமா?**

யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் செல்ல மோசேக்கு மிகவும் ஆசையாக இருந்தது. ஆனால், மோசே கவலையோடிருந்தார். தானும் மக்களுடன் சேர்ந்து, கானானுக்குள் செல்ல விரும்பினார். அப்போது மோசேயிடம், ‘‘இனி அதைப்பற்றிப் பேசவேண்டாம், நீகானான்தேசத்தைப்பார்ப்பாய். ஆனால், அதற்குள் நீ செல்ல முடியாது’’ என்று தேவன் சொன்னார்.

அதன்பிறகு மோசே தேவனை வற்புறுத்தவில்லை, தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு மோசே ஆயத்தமானார். அப்படியானால், ‘‘நான்



இறந்த பின்னர் இஸ்ரவேல் மக்களை யார் வழிநடத்துவார்கள்’’என்று தேவனிடம் கேட்டார். ஒரு நல்ல தலைவனைத் தரும்படியும் கேட்டார்.

‘‘யோசுவா தலைவனாக இருந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்துவான்’’என தேவன் மோசேயிடம் சொன்னார். ஏனென்றால், ஆரோன் இறந்ததிலிருந்து, யோசுவாதான் மோசேக்கு உதவியாக இருந்தார். யோசுவா, ஞானமும் விசுவாசமும் உள்ள தேவனுடைய மனிதன் என்பதில் மோசேக்கு சந்தோஷமாக இருந்தது.

மோசே செய்யவேண்டிய ஒரு கடைசிக் காரியத்தையும் தேவன் அவரிடம் சொன்னார். அநேக வருடங்களுக்கு முன்னர் சீனாய் மலையிலே தேவன் அவர்களுக்குப் பத்துக்கற்பனையைக் கொடுத்திருந்தார். இப்போது பெரியவர்களாக இருந்தவர்கள் மிகவும் சிறியவர்களாக இருந்தபோதுதான் அதைக் கேட்டிருந்

## மனன வசனம்

**உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் ... அன்புகூர்ந்து, அவரைச் சேவி(யுங்கள்).**

**உபாகமம் 11:13.**

தார்கள். இன்னும் சிலர் அப்போது பிறந்திருக்கவே இல்லை; இப்போது அவர்கள் சிறுவர்களாக, வாலிபர்களாக இருந்தார்கள். எனவே, சீனாயில் நடந்த காரியங்கள், தேவன் பேசிய பத்துக் கற்பனைகள் அவர்களுக்குத் தெரியாது. எனவே, மீண்டும் ஒரு முறை அந்தக் காரியங்களைப் பற்றி அவர்களிடம் சொல்லுமாறு தேவன் கூறினார்.

எனவே, மோசே மக்களை ஒன்றுகூட்டினார். எகிப்தில் அடிமைகளாக இருந்த அவர்களைத் தேவன் எவ்விதம் செங்கடலைப் பிளந்து வெளியே கொண்டு வந்தார் என்பதிலிருந்து சொல்ல ஆரம்பித்தார். வழிநெடுகிலும் இந்த 40 ஆண்டுகளாக தேவன் செய்த அற்புதங்களையெல்லாம் சொன்னார். தேவனின் மன்னிப்பையும் கூறினார்.

'மற்ற தேசங்களிலுள்ள கட்டளைகளைவிட தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளும், சட்டதிட்டங்களுமே, மேலானவை' என்றும் மோசே கூறினார். கானானில், தேவன் அவர்களுக்கென வைத்திருக்கும் மேன்மைகளைச் சொன்னார். பின்னர், பத்துக் கற்பனைகளைச் சொன்னார். தேவனின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தால், அதனால் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் கூறினார். தேவனுடைய வார்த்தைகளை மீறினால் வரவிருக்கும் சாபத்தையும் கூறினார். பின்னர் ஒரு பாடலுடன் தமது பேச்சை முடித்தார். உபாகமம் 32-ல் அதைக் காணலாம். மோசே சொல்லிய படி, தங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க, இந்த நல்ல பாடலை அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டியதாயிருந்தது.

பின்னர், தேவசித்தப்படி மோசே மோவாப் தேசத்தில் உள்ள நேபோ மலையில் ஏறினார். மோசே மலையின்மேல் ஏறிச்செல்வதை இஸ்ரவேலர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மோசே தங்களைப் பிரிந்து செல்வது அவர்களுக்குக் கவலையாயிருந்தது. கண்ணீருடன் பார்த்



## செய்தி

**தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்பும்போது,**
**நாம் தேவனைத் தொழுகிறோம்.**

துக்கொண்டேயிருந்தார்கள்.

மோசே அங்கேயிருந்து கானான் தேசத்தைப் பார்க்கும்படி தேவன் கிருபைசெய்தார். பின்னர் மோசே இறந்தார். தேவனே அவரை அடக்கம் செய்தார்; பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார். வேதம் இவ்வாறுதான் சொல்கிறது. ஆஹா என்ன ஒரு மேலான பாக்கியம்! தேவனுக்குக் கீழ்ப்படிந்ததாலேயே மோசேக்கு இந்த மேன்மை கிடைத்தது.

என் கண்மணியே! நீயும் மோசேயைப்போன்று தேவனுக்குக் கீழ்ப்படிவாயா?

### செய்முறை

*இந்த வாரப் பாடத்திலிருந்து சில கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. கேள்வியின் அருகே உள்ள அடைப்புக்குறியில் இருக்கும் எழுத்துகளை முறைப்படுத்தி எழுதுக.*

**1. மோசேக்கு அடுத்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்திய தலைவர் யார்? (சு வா யோ)**

______________________________

**2. இஸ்ரவேலர் எந்தத் தேசத்தில் அடிமைகளாக இருந்தார்கள்? (து ப் கி எ)**

______________________________

**3. இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பது யார்? (ன் வ தே)**

______________________________

**4. சீனாய் மலையிலே இஸ்ரவேலருக்கு தேவன் எதைக் கொடுத்தார்? (து ப த் ற் க னை க் ப ள் க)**



______________________________